564

சிறுபுலியூர்க் கோயில் வரலாறு



கோபுரவாயிலும் கோயிலும்

C

*

Q22:382119135
N54
113986

ஸ்தான வெளியீடு

1954

சிறுபுலியூர்க் கோயில் வரலாறு

திருச்சிராப்பள்ளி ஓய்வுபெற்ற தமிழ் ஆசிரியரும்,
'அற்புதக்கனி'—'திருமுருகாற்றுப்படைவிளக்கம்'—ஆசிரியரும்
H. R. & C. E. ஆதரவில் பல கோயில் வரலாறுகளை
எழுதியவரும் ஆகிய

திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்களால்
எழுதப்பெற்று

ஸ்ரீ கிருபாசமுத்திரப் பெருமாள் தேவஸ்தானம்
திரு. T. R. ஸ்ரீனிவாசன் அவர்கள்
நிர்வாக அதிகார்ரி

திரு. V. சுந்தரேச ஐயர் அவர்கள்
நிர்வாக தர்மகர்த்தர்

திரு. N. குஞ்சிதபாத முதலியார் அவர்கள்
திரு. S. மனோன்மணி பிள்ளை அவர்கள்
தர்மகர்த்தர்கள்
ஆகியோரால் வெளியிடப் பெற்றது.

FEB 1955
MADRAS

தேவஸ்தான வெளியீடு

1954.

உரிமை செய்யப்பெற்றது] [விலை 4 அணா.

Q22:38.21193.5
N.54

113986

முன்னுரை

தெய்வ உணர்ச்சியை உண்டாக்கும் சிறப்பிடங்களாக ஆன்றோர்கள் அமைத்த ஆலயங்கள் விளங்குகின்றன. அவைகளுள் தஞ்சாவூர் ஜில்லா—நன்னிலம் தாலூகாவில் உள்ளது சிறுபுலியூர்க் கோயில். புலிக்கால் முனிவர் வழிபட்டதாகச் சொல்லும் கோயில்களில் இது திருமால் கோயில். கோயிலுக்கு வருவோர் கோயிலின் பெருமைகளையும் அறிந்து கொள்வது நலம். சென்னை அறநிலையப் பாதுகாப்பு இலாகா (Hindu Religious and Charitable Endowments) அனுப்பிய சுற்றறிக்கையின்படி இவ்வரலாறு சுருக்கமாய் எழுதப் பெற்றுத் துணை ஆணையாளர் அவர்களால் அங்கீகாரம் செய்யப்பெற்றது. பழங்காலச் சின்னங்களாகிய கோயிற் சிற்பங்களைப் பாதுகாப்பதிலும், சமயப் பிரசாரத்தைச் சேர்ந்த தல வரலாறுகளை வெளியிடச் செய்வதிலும் தற்போதைய ஆணையாளர் (Commissioner) திரு. T. K. சங்கரவடிவேல் பிள்ளை I. A. S. அவர்களும், துணை ஆணையாளர் (Dy-Commissioner) திரு. S. கணேசம் பிள்ளை B. A. அவர்களும் தக்கன செய்து வருகின்றார்கள். இதில் ஆலய விளக்கமும், வரலாறுகளும், துதிப் பாடல்களும் சேர்க்கப் பெற்றுள்ளன. அன்பர்கள் படித்து ஸ்ரீ அருமாகடலமுதப் பெருமாளின் அருளைப் பெறுவார்களாக.

திருச்சிராப்பள்ளி
மலைக்கோட்டை
16—9—54

R. பஞ்சநதம் பிள்ளை
தமிழ் ஆசிரியர்.

உள்ளடக்கம்

		பக்கம்
1.	கோயிலும் இருப்பிடமும் ...	5
2.	கோயிலின் அமைப்பு ...	8
3.	கோயிலின் படம் ...	11
4.	மூர்த்திகளின் பெயர்கள் ...	12
5.	தீர்த்தங்கள் ...	13
6.	தலப்பெருமைகள் ...	13
7.	திருப்பணிகள் ...	14
8.	சிற்பங்கள் ...	15
9.	தினப்பூஜையும், திருவிழாக்களும் ...	15
10.	வருமானமும் சொத்துக்களும் ...	17
11.	நிர்வாகம் ...	17
12.	புராண வரலாறுகள் ...	18
13.	துதிப்பாடல்கள் ...	24

ஆலய விளக்கம்

கோயில் :— சிறுபுலியூர்—பால வியாக்கிரபுரம்.

பெருமாள் மூலவர் :— அருமாகடலமுதன்

சயனம் :— புஜங்க சயனம், பால சயனம்.

உற்சவர் — ஸ்ரீ கிருபா சமுத்திரப் பெருமாள்.

தாயார் மூலவர் — திருமாமகள்.

உற்சவர் — தயாநாயகி.

விமானம் — நந்தியாவர்த்த விமானம்.

புட்கரிணி — 1. அனந்த புட்கரிணி. 2. மானசபுட்கரிணி.

கண்ணுவ முனிவருக்கும், புலிக்கால் முனிவருக்கும் சேவை அளித்தது. 108 வைணவத் திருப்பதிகளுள் ஒன்று. திருமங்கை ஆழ்வாரால் மங்களாசாசனம் செய்யப் பெற்றது.



உற்சவர் ஸ்ரீ கிருபாசமுத்திரப் பெருமாள்.

சிறுபுலியூர்க் கோயில் வரலாறு

"கள்ளம்மனம் விள்ளும்வகை கருதிக்கழல் தொழுவீர்
வெள்ளம்முது பரவைத்திரைவிரியக்கரை யெங்கும்
தெள்ளும்மணி திகழும் சிறுபுலியூர்ச்சலசயனத்
துள்ளும் எனதுள்ளத்துளும் உறைவாரை உள்ளீரே"

1. கோயிலும் இருப்பிடமும்

ஆதி அந்தங்கடந்த பரம் பொருளாகிய இறைவன், உலகத்தில் உள்ள பல உயிர்களும் துன்பம் நீங்கி இன்பம் பெற்று உய்யும் வண்ணம் தன் கடந்த நிலையான அருவ நிலையிலிருந்து இறங்கி இப்பூவுலகத்தில் ஆங்காங்குள்ள பல தலங்களில் உருவத்திருமேனி கொண்டு எழுந்தருளிப் பக்தியுடன் வழிபடும் அடியார்களுக்கு அருள்செய்து வருகிறான். அத்தகைய சிறப்பிடங்களே ஆலயங்கள் ஆகும். பசுவின் உடல் முழுவதும் பால் மறைந்திருந்த போதிலும் மடியின் மூலமாகவே பால் வெளிப்படுவது போலவும், சூரியன் எங்கும் பரவியிருந்தாலும் பளிங்குக் கல்லின் மூலம் கிரணங்கள் விரைவில் வெளிப்படுவது போலவும், பூமிக்கடியில் நீர் இருந்தாலும் தோண்டிய இடத்தில்தானே நீர் தோன்றுவது போலவும் இறைவன் எங்கும் வியாபித்திருந்த போதிலும் பெரியோர்கள் அமைத்த ஆலயங்களில் உள்ள மூர்த்திகளின் மூலமாகவே இறைவன் வெளிப்பட்டு அன்பர்களுக்கு அருள் செய்வான். "இருஞ்சுரபிக்கெங்கும் உருக்காண ஒண்ணாத பால் முலைப்பால் விம்மி ஒழுகுவதுபோல வெளிப் பட்டருள்வன் அன்பர்க்கே" என்று ஆன்றோரும் கூறியுள்ளார்.

மேலும் பரம்பொருளாகிய இறைவனுக்கு பரத்வம், வியூகம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சை என்னும் ஐந்துவகை நிலைகள் உண்டு. இவற்றுள் பரத்வமாவது பரம பதத்தில் எழுந்தருளியிருக்கும் நிலை. வியூகமாவது திருப்பாற் கடலில் எழுந்தருளியிருக்கும் நிலை, விபவம் என்பது ராமகிருஷ்ணாதி அவதாரங்கள். அந்தர்யாமித்வம் என்பது சராசரப் பொருள்களாகிய இயங்கும் பொருள்கள் — இயங்காப் பொருள்கள் எல்லாவற்றுள்ளும் எள்ளினுள் எண்ணெய்போல் மறைந்திருப்பது. அர்ச்சை என்பது விக்கிரக ரூபங்களில் ஆவிர்ப்பவித்தல். இந்த ஐந்து வகை நிலைகளில் அடியார்களுக்குக் காட்சிக்கெளிதாய், கோயில்களில் உள்ள உருவமூர்த்திகளில் அருள்தன்மையுடன் விளங்கி நிற்பதாகிய அர்ச்சை நிலையே சிறந்ததாகக் கூறுவர் சான்றோர். "எளிதாக இந்த நெடுவேங்கடத்தில் எல்லோரும் தொழ நின்றாய்" எனக் கூறுகின்றார் ஒருவர். ஆதலின் பெறுதற் கருமையான மக்கட் பிறப்பைப் பெற்ற அனைவரும், பரம்பொருளாகிய இறைவனை அன்பினால் வழிபட்டு, அவன் வகுத்த நன்னெறியில் சென்று அவனருளைப் பெறமுயலுதல் சிறந்த கடமையாகும். "உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம் உடம்பின் உத்தமனைக்காண்" என்று ஆன்றோரும் கூறியுள்ளார்.

நமது முன்னோர்களின் நாகரிக வாழ்வுக்கு எடுத்துக் காட்டாக விளங்குவன முன்னோர்கள் எடுப்பித்த திருக்கோயில்களாகும். இவைகள் பக்தியை உண்டாக்கும் இடங்களாவதன்றிச் சிற்பங்கள் நிறைந்த சேகரங்களாகும். இவைகளை முன்னோர்கள் தம் உயிரினும் மேலாகப் பாதுகாத்துப் பின்வழியினராகிய நமக்கு அருஞ்செல்வங்களாக வைத்துச் சென்றார்கள். நாட்டின் நலத்துக்கும், மக்களின் நல்வாழ்வுக்கும் கோயில்கள் இன்றியமையாதன. வாழ்க்கைக் கடலில் அகப்பட்டுத் துன்புறும் மக்களுக்குக்

கோயில்கள் கலங்கரை விளக்கங்களாக விளங்குகின்றன. 'கோயில் விளங்கக் குடிவிளங்கும். ஆலயந்தொழுவது சாலவும் நன்று' என்பவை ஆன்றோர் கூறிய அனுபவ மொழிகளாகும்.

தென்னாடாகிய தமிழ்நாட்டில் பெருமான் உறையும் கோயில்கள் பல. அவை சிவன் கோயில்கள், திருமால் கோயில்கள், முருகன் கோயில்கள், அம்மன் கோயில்கள் முதலியன. இவைகளில் அந்தந்த சமயத் தலைவர்களால் பதிகம் பாடப்பெற்ற தலங்களும், தல புராணங்களைக் கொண்ட கோயில்களும், புலவர்களால் தனிப்பாடல் பெற்ற தலங்களும், பக்தர்களால் அமைக்கப்பெற்ற அபிமானத் தலங்களும் அடங்கியுள்ளன. இக்கோயில் களில் திருமால் அடியார்களாகிய ஆழ்வார்களால் மங் களாசாசனம் செய்யப்பெற்ற—பதிகம்பாடப் பெற்ற 108 வைணவத் திருப்பதிகளுள் சிறுபுலியூர்த்தலமும் ஒன்று கும். இதற்குத் திருமங்கையாழ்வாரால் பாடப் பெற்ற பிர பந்தப்பாசுரங்கள் உண்டு. இத்தலத்திற்குப் பால வியாக் கிரபுரம், சலசயனம் என்ற பெயர்களும் வழங்குகின்றன. புலிக்கால் முனிவரான வியாக்கிர பாதர் வழிபட்டதாலும், பாலமுனிவரான புலிக்கால் முனிவர்க்கு எம்பெருமான் பாலசயனமாய்ச் சேவை அளித்ததாலும் சிறுபுலியூர், பால வியாக்கிரபுரம் என்றும், எப்போதும் நீர்வளமுள்ள நிலத்தில் பெருமாள் கோயில் கொண்டு பள்ளி கொண்டிருப்பதால் சலசயனம் என்றும் பெயர்கள் வழங்குகின்றன.

புலிக்கால் முனிவர் வழிபட்ட தலங்கள் புலியூர் என்ற பெயரால் வழங்கும். இப்பெயர் கொண்ட தலங்கள் பெரும் பற்றப்புலியூர், பெரும்புலியூர், பாதிரிப் புலியூர், எருக்கத்தம் புலியூர், ஓமாம் புலியூர் முதலியன.

மருதநில மன்னனது இருப்பிடமாகிய சோழ நாட்டில், கீழத்தஞ்சை ஜில்லா—நன்னிலம் தாலூகாவில் மாயூரம்—திருவாரூர் தென்னிந்திய இருப்புப்பாதை மார்க்கத்தில் கொல்லுமாங்குடி ரயில் நிலையத்திற்குக் கிழக்கே ஒருமைல் தூரத்திலும், கும்பகோணம்—காரைக்கால் மோட்டார் வண்டிப்பாதையில், நெடுங்காடு செல்லும் வழியில், கற்சாலையிலிருந்து வடக்கே 4 பர்லாங் தூரத்திலும் சிறுபுலியூர் என்னும் தலம் அமைந்துள்ளது. புகை வண்டியின் மூலமாகவும், மோட்டார் வண்டியின் மூலமாகவும் கொல்லுமாங்குடி வழியாக இவ்வூரை அடையலாம். ஊர் மிகச்சிறியது. பஞ்சாயத்து முறையில் ஆட்சி நடைபெறுகிறது. பஞ்சாயத்தைச் சேர்ந்த தொடக்கப் பள்ளிக்கூடம்- (Elementary School) உள்ளது. ஜனத்தொகை சுமார் 1200 பேர்கள். பல ஜாதியினர் குடியிருக்கிறார்கள். இவ்வூரில் சத்திரம் சாவடிகள் இல்லை. ஆனால் கொல்லுமாங்குடியில் ஓர் தனிப்பட்ட சத்திரம் இருப்பதாகத் தெரியவருகிறது.

2. கோயிலின் அமைப்பு

மருதநிலமாகிய நன்செய் நிலங்களுக்கு நடுவில் கோவில் அமைந்துள்ளது. கோயிலைச் சுற்றிலும் சோலைகளும், வாவிகளும், நீரோடைகளும், சூழ்ந்துள்ளன. "அறையும் புனல் ஒருபால், வயல் ஒருபால், பொழில் ஒருபால்" என ஆழ்வாரும் காட்டுகிறார். இயற்கைக் காட்சிகள் நிறைந்த சோலைகளில் தேனை உண்ணுவதற்காக வண்டுகள் ஒலித்துக் கொண்டிருக்கும். இலுப்பை முதலிய மரங்கள் சூழ்ந்து குளிர்ச்சியான நிழலைக் கொடுக்கும். ஆங்காங்குள்ள குளங்களில் செந்தாமரைப் பூக்கள் மலர்ந்து இனிய காட்சியைத் தரும். இவைகளை அமைத்துத்



நந்தியாவர்த்தவிமானமும் கோயில் தோற்றமும்.

திருமங்கை ஆழ்வார், "சிறைவண்டிரையும் சிறு புலியூர், தேனர் பொழில் தழுவும் சிறுபுலியூர், செந்தாமரை மலரும் சிறுபுலியூர், செழுநீர் வயல் தழுவும் சிறுபுலியூர்" என்று பாடியுள்ளார். கோயிலைச் சுற்றி அழகிய வீதிகள். அவைகளில் அந்தணர் மறை ஓதுவதும், வேள்வி செய்வதும் நடைபெறும். இதை "திருவில் பொலிமறையோர் சிறுபுலியூர், தீயோம்பு கைமறையோர் சிறுபுலியூர்" எனக்காட்டுகிறுர். இத்தலத்திற்குக் கிழக்கே 12 மைல் தூரத்தில் கடல் இருப்பதால் சில சமயங்களில் கடலின் அலைகள் விரிந்து சென்று கரைகளில் அழகிய முத்துக்களைச் சேர்க்குமாம். இதை. "வெள்ளம் முதுபரவைத் திரை விரியக்கரை எங்கும் தெள்ளும்மணி திகழும் சிறுபுலியூர்" எனக்கூறுகிறுர். இவ்வூருக்குத் தெற்கே சிறிது தூரத்தில் நாட்டுவாய்க்கால் என்னும் சிற்ருறு ஓடுகிறது.

இவ்வளவு செழுமையான நீர்வளமுள்ள மருதநிலப் பகுதியில் கோயில் அமைந்துள்ளது. கோயில் பழமையானது. மதிலும், சுவரும், தளவரிசையும் செங்கல்களால் அமைந்தவை. மூலவர் மண்டபம் கருங்கல்லால் கட்டப்பட்டது. கோயிலுக்கு முன்னே சுமார் 75 அடி உயரமுள்ள ராஜகோபுரம் 5 கண்களைக்கொண்டு ஐந்நிலைமாடமாகத் தெற்கு நோக்கியுள்ளது. கோபுரவாயிலில் சிறிய திருவடியாகிய அநுமானின் சிலை உள்ளது. உள்ளே சென்ருல் 2 ம் பிராகாரமாகிய முன்னிடத்தில் சூடிக்கொடுத்த நாச்சியாராகிய ஸ்ரீ ஆண்டாள் சந்நிதியும், துவஜஸ்தம்பமாகிய கொடிமரமும், பலிபீடமும், பெரிய திருவடியாகிய ஸ்ரீ கருடாழ்வார் சந்நிதியும், ஊஞ்சல் மண்டபமும் உள்ளன. தென் மேற்கு மூலையில் பழங்

காலக்கட்டிடமான நெற்களஞ்சியம் உள்ளது. இவைகளைக் கடந்து சென்றால் மற்றோர் சிறிய கோபுரம் உள்ளது. இது சுமார் 25 அடி உயரத்தில் 3 கண்களைக் கொண்டு விளங்குகிறது. இதைத் தாண்டிச் சென்றால் சொக்கட்டான் மண்டபம் உள்ளது. இதில் மேற்கே இராஜ கோபாலர் சந்நிதியும், பள்ளி அறையும், கிழக்கே சொர்க்க வாசலும் உள்ளன. மூலஸ்தானத்தில் பாலசயனங் கொண்ட பெருமாளும், உற்சவ மூர்த்தியும் எழுந்தருளியிருக்கிறார்கள். பாலசயன மூர்த்தியின் திருநாபியில் பிரமனும், திருவடிகளில் கண்வமுனிவரும், புலிக்கால் முனிவரும் அமர்ந்திருக்கிறார்கள். மூலவரின் விமானம் நந்தியர்வர்த்த விமானம் எனப்படும். மூலஸ்தானத்தை அடுத்துள்ளது முதல் பிராகாரம். இது திரு உண்ணாழி எனப்படும். இந்தப்பிராகாரத்தில் திருமாலின் 10 அவதாரங்களாகிய மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனன், பரசுராமன், ராமன், பலராமன், கிருஷ்ணன், கல்கி என்னும் அவதாரங்களும், திருமாலின் அடியார்களாகிய பன்னிரண்டு ஆழ்வார்களின் உருவங்களும் பலவர்ணங்கால் சித்திரிக்கப் பெற்றுள்ளன. திருமங்கை ஆழ்வார் இவ்வூரைப்பற்றிப் பாடிய பிரபந்தப்பாடல்களும் எழுதப் பெற்றுள்ளன. கோயிலின் 2 ம் பிராகாரத்தின் வடபுறத்தில் திருமாமகளாகிய ஸ்ரீ தாயார் சந்நிதி கிழக்கு நோக்கி உள்ளது. கோயிலுக்கு வெளியே இராஜகோபுரத்துக்குப் பக்கத்தில் தென்கலை ஸ்ரீ வைணவ ஆச்சாரியாரான ஸ்ரீ மணவாளமாமுனியின் சந்நிதி மேற்கு நோக்கி உள்ளது. இதில் மூலவரும் உற்சவமூர்த்தியும் எழுந்தருளியுள்ளார்கள். இதற்குப் பக்கத்தில் தேவஸ்தான அலுவலகம் (Office) உள்ளது. தலவிருட்சம் வில்வமரம். கோயிலின் சுற்றளவு கிழ மேலடி 142. தென் வடலடி 255. கோயிலின் அமைப்பைக் காட்டும் படம் தனியே உள்ளது.

3. கோயிலின் படம்.



1. ராஜகோபுரம்
2. மூலவர் சந்நிதி
3. தாயார் சந்நிதி
4. சொர்க்கவாசல்
5. இராஜகோபாலர்
6. பள்ளியறை
7. ஆண்டாள் சந்நிதி
8. உள்கோபுரம்
9. மணவாள மாமுனி கோயில்
10. ஆழ்வார்கள் சந்நிதி
11. மடைப்பள்ளி
12. நெற்களஞ்சியம்
13. நாற்கால்மண்டபம்
14. கருடாழ்வார்.

4. மூர்த்திகளின் பெயர்கள்

இத்தலத்துப் பாலசயனங் கொண்ட பெருமாளுக்கு அருமா கடலமுதன் என்ற பெயரும், உற்சவருக்கு கிருபா சமுத்திரப் பெருமாள், சரணுகதரட்சகர் என்ற பெயர்களும் வழங்குகின்றன. பாற்கடலில் தோன்றிய அமுதம் போன்று அடியார்களுக்கு இனியனுயிருப்பதால் அருமா கடலமுதன் என்றும், கருணைக்கடலாக விளங்குவதால் கிருபா சமுத்திரப் பெருமாள் என்றும், அடைக்கலம் புகுந்தவர்களைக் காப்பாற்றி அருள்செய்வதால் சரணுகத ரட்சகர் என்றும் பெயர்கள் ஏற்பட்டன. தேவியாராகிய மூலவருக்குத் திருமாமகள் என்றும், உற்சவருக்குத் தயா நாயகி என்றும் பெயர்கள் வழங்குகின்றன. இலக்குமி என்றும், கருணையுடைய பிராட்டி என்றும் பொருள்படும். தேவியுடன் கூடிய பெருமாளைச் சுட்டி "திருமாமகள் மருவும் சிறுபுலியூர் அருமாகடலமுதே" என்று ஆழ்வாரும் பாடியுள்ளார். மூலப்பெருமாளின் விமானம் நந்தியாவர்த்த விமானம் எனப்படும். நந்தியாவர்த்த மலரைப்போல் அமைந்திருப்பதால் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். பெருமாள் புஜங்கசயனத்தில்—பாம்புப்படுக்கையில் தெற்கு நோக்கிக் காட்சி தருகின்ருர். சொக்கட்டான் மண்டபத்தில் இராஜகோபாலரும், 2 ம் பிராகாரத்தில் ஸ்ரீ ஆண்டாளும், 12 ஆழ்வார்களும் கோயில் கொண்டிருக்கிருர்கள். கோயிலுக்கு வெளியே ஸ்ரீ மணவாளமாமுனிகள் கோயில் கொண்டிருக்கிருர். அனுமான், கருடன் முதலியவர்களும் ஆங்காங்கு எழுந்தருளியுள்ளார்கள். இவர்கள் சிறியதிருவடி என்றும், பெரிய திருவடி என்றும் வழங்கப் பெறுவார்கள். அனந்தாழ்வார் சந்நிதி கோயிலுக்கு மேற்கில் குளக்கரையில் உள்ளது.

5. தீர்த்தங்கள்

திருவனந்தபுஷ்கரிணி :— கோயிலுக்கு மேற்கில் உள்ளது. திருவனந்தாழ்வார் இக்குளத்தின் கரையில் தவஞ்செய்து அருள்பெற்றதால் இப்பெயர் ஏற்பட்டது.

மானசபுஷ்கரிணி :— இது கோயிலுக்குக் கிழக்கில் உள்ளது. திருவனந்த புஷ்கரிணியில் முறைப்படி நீராடி ஸ்ரீ கிருபா சமுத்திரப் பெருமாளை வழிபடுவோர் இம்மையில் வேண்டும் பேறுகளையும், மறுமையில் முத்திச் செல்வத்தையும் பெறுவர்.

6. தலப்பெருமைகள்

ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற—பதிகம் பாடப்பெற்ற 108 வைணவத் திருப்பதிகளுள் இத்தலம் 11 வது பதியாகவுள்ளது. இயற்கைக் காட்சிகள் நிறைந்த குளிர்ந்த சோலைகளையுடையது. நகர வாழ்க்கையில் மனவமைதி பெறமுடியாமல் அல்லற்படும் மக்களுக்கு மன அமைதியை உண்டாக்கும் மாண்பதியாகும். தல சயனம், வட சயனம், சல சயனம் என்னும் மூன்று முக்கிய தலங்களுள், சிறுபுலியூராகிய இத்தலம் சல சயனப்பதியாகும். தவஞ் செய்வோருடைய தவங்கள் சித்திப்பதால் இது தவப்பிரசித்தித் தலமாகும். கிருஷ்ணாரண்ய க்ஷேத்திரங்களுள் ஒன்று. கண்ணுவ முனிவருக்கும் பால முனிவரான புலிக்கால் முனிவருக்கும் பால சயனமாய்க் காட்சி கொடுத்தது. இதற்கடையாளமாகப் பால சயன மூர்த்தியின் திருவடிகளில் இருமுனிவர்களும் வீற்றிருக்கிறார்கள். சூரியன், அனந்தன், துர்வாசர், மணவாள மாமுனிகள் முதலியோர் வழிபட்டுப் பேறுபெற்றது. ஆழ்வார் பன்னிருவரில் திருமங்கை ஆழ்வாரும், பிள்ளைப் பெருமாள் ஐயங்காரும் பிரபந்தப்பாடல்கள் பாடிப்

பெருமாளின் அருளைப் பெற்றது. சமயபேதமின்றிச் சிவனடியார்களும், வைணவ அடியார்களும் வழிபட்டபதி. ஆகவே மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றினாலும் பெருமையுடையது.

7. திருப்பணிகள்

முன்னோர்கள் ஏற்படுத்திய பல பெருமைகளை யுடைய கோயில்களுக்கு எவ்வித தீங்கும் நேராதபடி அவ் வப்பொழுது ஆவன செய்யவேண்டும். புதியதோர் ஆல யத்தை அமைப்பதைப் பார்க்கிலும், பழமையான கோயிலைப் புதுப்பித்தல் மிக்க புண்ணியத்தைத் தரும் என்பர். மேலும் கோயில்களில் பூஜை முதலியன நடை பெறாமல் முட்டுப்பாடு ஏற்பட்டால் நாட்டுக்குத் தீங்கு உண்டாகும் என்பர். "முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின், மன்னர்க்குத் தீங்குள வாரிவளங்குன்றும், கன்னங்களவு மிகுத்திடும் காசினி, என்னரு நந்தி எடுத் துரைத்தானே" என்று திருமூலர் கூறுகிறார். எனவே இக்கோயிலில் அவ்வப்போது திருப்பணிகள் நடந்து வந் திருக்கின்றன. சுமார் 60 ஆண்டுகளுக்கு முன் அப்போ திருந்த டிரஸ்டி செம்மங்குடி சுப்பராயருடைய முயற்சி யால் கோயிலும் கோபுரமும் பழுது பார்க்கப்பட்டுத் துன்முகிவருடம் சித்திரை மாதத்தில் 30—4—1896 ல் சம்புரோட்சணம் என்னும் கும்பாபிஷேகம் நடைபெற் றது. பிறகு சுற்றுக் கோயிலாகிய ஸ்ரீ மணவாள மாமுனி களின் கோயில் சென்னை ராமானுஜ கூடம் சூடம்மா எஸ் டேட்டாரால் திருப்பணி செய்யப் பெற்று கலி 5036—யுவ வருடம் சித்திரைமாதம் 1-ந் தேதி 30—6—1935-ல் திருப் பணி முடிவுபெற்றும், பிறகு ஸ்ரீ K. சாம்பசிவய்யர் அவர்கள் மானேஜிங் டிரஸ்டியாய் இருந்த காலத்தில் பெருமாள் மூலவர் கோபுரம், தாயார் கோபுரம் முதலியன திருப்பணி செய்யப் பெற்றும் தேவஸ்தான நிதியிலிருந்து

17—5—36-ல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இப்பால் குருஸ்தானம் ஸ்ரீ சாமிநாத பிள்ளை அவர்கள் உபயமாகப் பெரிய கோபுரத்தின் உச்சியில் நீல மின் விளக்கு (Mercury light) அமைக்கப் பெற்றுள்ளது. 6—12—54-ல் உற்சவருக்கு ஸ்ரீ சடகோபமும், வெள்ளிக்கவசமும் சாத்தப் பெற்றன. மிகப்பழமையான இக்கோயிலில் மேலும் பல திருப்பணிகள் செய்யவேண்டியிருப்பதாலும், பழுதாயுள்ள தேரைப் புதுப்பிக்கவேண்டியிருப்பதாலும் அவைகளை நிறைவேற்றி வைக்கும் வகையில் பொதுமக்கள் உதவி செய்வார்களாக.

8. சிற்பங்கள்

கோயிலின் பெரிய கோபுரம் 5 மாடங்களைக் கொண்டும், சிறிய கோபுரம் 3 மாடங்களைக் கொண்டும் கட்டப்பட்டன. கோபுரங்களில் பல புராண வரலாறுகளை அறிவிக்கும் பல சிற்பங்கள் பல வர்ணங்களால் அமைக்கப்பட்டுள்ளன. மூலவருக்கு முன்னேயுள்ள சொக்கட்டான் மண்டபமும், தாயார் சந்நிதியிலுள்ள மண்டபமும் வளைவுகள் அமைத்துக் கட்டப்பெற்றுள்ளன. கோபுரத்தின் வாயிலில் அனுமானின் உருவம் உள்ளது. பெருமாளின் விமானம் நந்தியாவர்த்த மலர்போல அமைக்கப் பெற்று நந்தியா வர்த்த விமானமென வழங்குகிறது. உற்சவ விக்கிரகங்களும், வேறு பல சிலைகளும் அழகாகச் செய்யப்பட்டுள்ளன. 2ம் பிராகாரத்தில் தென்மேற்கு மூலையில் பழங்கால நெற்களஞ்சியம் ஒன்று பழமையைக் காட்டிக் கொண்டிருக்கிறது. உள்ளே மூலவருடைய கல்லாலாகிய மண்டபம் பலவகைச் சிற்பங்களுடன் விளங்குகிறது.

9. தினப்பூஜையும் திருவிழாக்களும்

இக்கோயிலில் காலை முதல் அர்த்தசாமம் வரையில் பல பூஜைகள் நிகழ்கின்றன. காலை 6 மணிக்கு விஸ்வ

ரூபமும், $8\frac{1}{2}$ மணிக்குக் காலை சந்திப் பூசையும், $9\frac{1}{2}$ மணிக்குத் திருப்பாவை வழிபாடும், பகல் 12 மணிக்கு உச்சிக் காலப் பூஜையும், மாலை 6 மணிக்கு நித்தியானுசந்தானமும், இரவு 8 மணிக்கு இரவுகாலப் பூஜையும். 9 மணிக்கு அர்த்தசாமப் பூஜையும் நடைபெற்று வருகின்றன.

ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் பெருந் திருவிழா நடைபெற்று வருகிறது. திருவாதிரை நாளில் கொடி ஏற்றமாகிப் பத்து நாட்கள் வரை பெருமாள் பல வாகனங்களில் புறப்பட்டுக் காட்சிதரும். கடைசி நாள், அஸ்த நட்சத்திரத்தில் தேரோட்டம் நிகழும். சிலகாலமாகத் தேர் பழுதுபட்டிருப்பதால் இரண்டு வருடமாகத் தேரோட்டம் நடைபெறுவதில்லை. மற்ற மாதங்களிலும் அவ்வப்போது நடைபெறவேண்டிய விழாக்கள் நடைபெறும். ஆடிமாதம் பூரநாளில் ஆண்டாள் புறப்பாடும், வளர்பிறை ஏகாதசியில் ஜேஷ்டாபிஷேகமும், ஆவணி மாதத்தில் உறியடி விழாவும், புரட்டாசியில் நவராத்திரி நாட்களில் தாயார் சந்நிதியில் நவராத்திரி விழாவும், விஜயதசமியில் அம்பு விடும் காட்சியும் நடைபெறும். ஐப்பசி மாதத்தில் ஸ்ரீ மணவாள மாமுனிகளின் உற்சவம் மகநாளில் தொடங்கி 9 நாட்கள் வரை நடைபெற்று 10 வது மூலநாளில் சாத்துமுறை நடைபெறும். அப்போது உற்சவர் புறப்பாடாகிக் காட்சி கொடுப்பர். கார்த்திகை மாதத்தில் தீப நாளில் சொக்கப்பானை கொளுத்தப் பெறும். பெருமாள் புறப்பாடும் உண்டு. மார்கழியில் 20 நாட்கள் வரை வைகுண்ட ஏகாதசி உற்சவமாகிய அத்தியயன உற்சவம் நிகழும். அப்போது பரமபதவாசல் திறக்கப் பெற்றுப் பெருமாள் எழுந்தருள்வர். தைமாதத்தில் தாயார் சந்நிதியில் 5 நாட்கள் அத்தியயன உற்சவம் நிகழும். பொங்கல் நாளில் சங்கராந்தி உற்சவமும் பாரிவேட்டையும் நிகழும்,

மாசிமாதம் வளர்பிறை ஏகாதசி நாளில் அனந்தாழ்வாருக்குப் பெருமாள் சேவைதரும் உற்சவம் நடைபெறும். இது இக்கோயிலுக்கு முக்கிய உற்சவம். பங்குனி மாதம் உத்திரநாளில் கோயிலுக்குள் பெருமாள் புறப்பாடாகும். சித்திரை மாதத்தில் வருடப் பிறப்பிலும், அட்சய திருதியை, வளர் பிறைத் திருதியை நாட்களிலும் பெருமாள் புறப்பாடு உண்டு. இவ்வாறாக வைகாசியில் பெருவிழாவும், மற்ற மாதங்களில் பொது விழாக்களும் நடைபெற்று வருகின் றன. இவ்விழாக்காலங்களில் பெருமாள், தன்னைத் தரிசிக்க வரும் அடியார்களுக்கு அருளமுதத்தை வழங்குகின்றார்.

10. வருமானமும் சொத்துக்களும்

இக்கோயிலுக்குச் சுமார் 42 வேலி நன்செய் நிலங் களும், மனைப்பகுதிகளும் உள்ளன. இவைகளின் குத்தகை மூலமாய் ஆண்டுதோறும் சுமார் முப்பதாயிரம் ரூபாய் வருமானம் வரும். சர்க்கார் மோகினித் தொகையின் மூலம் ரூ. 275—2—8 கிடைக்கும். சுமார் ஆயிரத்தைந்நூறு ரூபாய் மதிப்புள்ள திருவாபரணங்கள் உண்டு.

11. நிர்வாகம்

இக்கோயிலின் நிர்வாகம் ஆதியில் பஞ்சாயத்தார் மேற்பார்வையில் இருந்து வந்தது. பிறகு சுமார் 10 வருட மாகச் சென்னை அறநிலையப்பாதுகாப்புக் கழகத்தாரின் நிர்வாகத்தில் சேர்ந்து 30—5—46 தேதியிலிருந்து அற நிலையப் பாதுகாப்பு இலாகாவால் (Hindu Religious & Charitable Endowments) நியமிக்கப் பெற்ற நிர்வாக அதி காரியின் (Executive Officer) கண்காணிப்பில் நிர்வாகம் நடைபெற்றுவருகிறது. மேலும் ஷ்டி இலாகாவால் நிய மிக்கப்பெற்ற மூன்று தர்மகர்த்தாக்களும் உடனிருந்து கோயில் காரியங்களைக் கவனித்து வருகிறார்கள்.

12. புராண வரலாறுகள்

1. அனந்தன் வழிபட்டது

ஒருகாலத்தில் அனந்தனுன ஆதிசேடன் என்னும் பாம்புக்கும், கருடனுக்கும் பகைமை ஏற்பட்டு ஒன்ருே டொன்று போரிடத் தொடங்கின. கருடனுக்குப் பயந்த ஆதிசேடன் பல இடங்களுக்கும் சென்று ஓடித்திரிந்து கடைசியில் சிறுபுலியூராகிய இத்தலத்திற்கு வந்து, புஷ்கரிணிக்கரையில் பெருமானைக் குறித்துத் தவஞ்செய்தான். இவ்வாறு தவஞ் செய்யும் ஆதிசேடனுக் கிரங்கிக் கருணைக் கடலாகிய கிருபா சமுத்திரப் பெருமாள், மாசிமாதம் வளர்பிறை ஏகாதசி நாளில் ஆதிசேடனுக்குக் காட்சி கொடுத்து, அபயந்தந்து அவனைத் திருவணையாகக் கொண்டு பாலசயனமாய்ச் சயனித்தருளினுர். ஆதிசேடனும் புஜங்கசயனமாகிப் பயமற்றிருந்தான். கருடனும், அனந்தனைப் பல இடங்களில் தேடிக் காணுமல் இவ்விடம் வந்து அனந்தன் நிலையைப் பார்த்து ஒன்றும் செய்யமுடியாமல் பெருமானை வணங்கி நின்ருன். அப்போது அனந்தன் கருடனை நோக்கி "கருடா சுகமா" என்று கேட்க கருடன் "இருக்குமிடத்தில் இருந்தால் சுகந்தான்" என்று விடை கூறிப் பெருமானின் திருவருள் பெற்றுச் சென்ருன். புஷ்கரிணிக்கரையில் அனந்தன் தவஞ்செய்து அருள் பெற்றதால் அனந்த புஷ்கரிணி என்ற பெயர் ஏற்பட்டது. இவ்வாறு பெருமான் அனந்தனுக்குக் காட்சி தந்து அருளியபோது அனந்தனும், பிரம்மனும், துர்வாசர், கண்ணுவர் முதலிய முனிவர்களும் பெருமானை நோக்கி "உலகில் உள்ள உயிர்களுக்கு அருள் செய்ய வேண்டியும், சரணுகதி அடைந்தவரைக் காப்பாற்ற வேண்டியும் என்றும் இவ்வாறே சேவை சாதிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தனர். எம்பெருமானும் சரணுகத

ஸ்ரீ அனந்தபுட்கரிணியும், ஸ்ரீ அனந்தன்கோயிலும்.

ரட்சகராய் அவர்கள் விரும்பியபடியே இக்கோயிலில் வீற்றிருந்து சேவை சாதித்து வருகிறார். இதனால் "ஆரேனும் தன்னடைந்தார்க்கருள் செய்வானே" என்ற படி தன்னைச் சரண் என்றெண்ணித் தஞ்சம் புகுவோர் யாராயிருந்தாலும் அவர்களைப் பெருமான் நிச்சயம் காப்பாற்றுவார் என்ற உண்மை தெரிய வருகிறது. இவ்வரலாறு பிரம்மாண்ட புராணத்தில் 4 வது அத்தியாயத்தில் சொல்லப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

2. புலிக்கால் முனிவர் வழிபட்டது

இவர் மத்தியந்தின முனிவருடைய புதல்வர். இவர் பால முனிவர் என்னும் பெயர் பூண்டு கோயில் என்னும் சிறப்புப் பெயர் பெற்ற சிதம்பரத்தை அடைந்து சிவகங்கைத் தீர்த்தத்தில் குளித்துப் பெருமானைப் பூசித்து வந்தார். பூசைக்குரிய முக்கியமான மலர்களை மரங்களிலிருந்தே எடுப்பதற்கு விரும்பிப் பெருமானிடம் ஓர் வரம் கேட்டார். விடிவதற்கு முன்பே மரத்திலேறி மலர் பறிப்பதற்கு மரத்தில் வழுக்காதபடி கால்களும், கைகளும் புலியினுடைய கைகால்களைப்போல நகப்பற்றுடையனவாய் இருக்கும் படியும், இரவில் வழிபார்த்து நடப்பதற்கும், மலர்களைப் பார்த்துப் பறிப்பதற்கும், புலியைப் போன்ற கண்கள் அமையும் படியும் வரங்கேட்டுப் பெற்றுக்கொண்டார். இதனால் இவருக்குப் புலிக்கால் முனிவர் என்றும், வியாக்கிரபாதர் என்றும் பெயர்கள் ஏற்பட்டன. இவர் இவ்வாறு புதிய உடலைப் பெற்று விடியுமுன்பே சென்று கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ என்னும் நால்வகை மலர்களையும் பறித்து நடராஜப் பெருமானைப் பூசித்துப் பெருமானுடைய திரு நடனத்தைத் தரிசித்து வந்தார். இவர் வசிட்டமுனிவரின் தங்கையை மணந்து உபமன்யு முனிவரைப் பெற்றதாகக் கூறுவர்.

இவ்வாறு புலிக்கால் முனிவர் நடராஜப் பெருமானைப பல காலம் வழிபட்டு முத்திப்பேறு விரும்பினர். பெருமான் அவரைப் பல தலங்களுக்கும் சென்று வழிபடுமாறு பணித்து முடிவில் கிருபா சமுத்திரப் பெருமாளைத் தரிசித்து முத்திப்பேறு அடையும்படி அருள் செய்தார். புலிக்கால் முனிவரும் நடராஜப் பெருமானின் கட்டளைப்படி பல தலங்களையும் தரிசித்து வந்தார். இவர் வழிபட்ட தலங்கள் புலியூர் என்ற பெயரால் வழங்கும். அவை பெரும்பற்றப் புலியூர், பாதிரிப் புலியூர், ஓமாம்புலியூர், எருக்கத்தம் புலியூர், பெரும்புலியூர் முதலியன. புலிக்கால் முனிவர் பல பதிகளையும் தரிசித்துக்கொண்டு முடிவில் பெருமான் கட்டளையிட்டபடி கிருபா சமுத்திரப் பெருமாளைத் தரிசிப்பதற்கு இப்பக்கம் வந்தபோது இடந் தெரியாமல் திகைத்து நின்றார். அப்போது சிவபெருமான் ஓரிடத்தில் லிங்க ரூபமாய்த் தோன்றிப் பக்கத்தில் பாலசயன மூர்த்தியாய் விளங்கும் கிருபா சமுத்திரப் பெருமாளைக் காட்டியருளினர். இதன் அடையாளமாகக் கோயிலுக்கு எதிரில் உள்ள வயலில் ஓர் சிவலிங்கம் உள்ளது. முனிவரும் அவ்விடத்திற்குச் சென்று பாலசயன கோலத்துடன் விளங்கும் கிருபா சமுத்திரப் பெருமாளைக் கண்ணாரக் கண்டு தரிசித்துப் பேறு பெற்றார். இதன் அறிகுறியாகப் பாலசயன கோலமாய்ப் பள்ளி கொண்ட பெருமாளின் திருவடிகளில் கண்ணுவ முனிவருடன் புலிக்கால் முனிவரும் வீற்றிருக்கின்றார். இவ்வரலாறு கர்ணபரம்பரையாகச் சொல்லப்படுகிறது.

எனவே புலிக்கால் முனிவர் வழிபட்டதாலும், பால முனிவரான புலிக்கால் முனிவர்க்கு எம்பெருமான் பாலசயனமாய்ச் சேவை அளித்ததாலும் இத்தலம் சிறுபுலியூர் என வழங்கலாயிற்று என்று பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் கூறியுள்ளார்.

3. திருமங்கை ஆழ்வார் வரலாறு

பக்தி வெள்ளத்தில் பரவசப் பட்டு ஆழ்ந்திருப்பவர்கள் ஆழ்வார்கள். திருமால் அடியார்களாகிய ஆழ்வார்கள் பன்னிருவர். அவர்களில் திருமங்கை ஆழ்வாரும் ஒருவர். இவர் சோழ மண்டலத்தில், திருமங்கை நாட்டில், திருக்குறையலூரில், கள்ளர் குலத்தில் சோழமன்னனுக்குச் சேனைத் தலைவனாகவுள்ள ஒருவனுக்குப் புதல்வராய், கார்த்திகை மாதம் கிருத்திகை நாளில் அவதரித்தார். இவர் திருமாலின் ஐம்படைகளில் சாரங்கம் என்னும் வில்லின் அம்சமாகத் தோன்றியவர். பெற்றோர் இவர்க்கு நீலன் என்ற திருநாமம் இட்டனர். திருவெள்ளக்குளம் என்ற திருப்பதியில் வாழ்ந்த குமுத வல்லி என்பவளை மணந்து பகவானை வழிபட்டு வந்ததுடன் நில்லாமல் அடியார்களான பாகவதர்களையும் ஆராதனை செய்து வந்தார். இவ்வாறு வழிபாடு செய்து வருகையில் செல்வமெல்லாம் குறையவே, வழிப்பறி செய்தாகிலும் கைங்கரியம் நடத்தக் கருதினார். பல துணைவர்களை உடன் சேர்த்துக் கொண்டு ஆங்காங்கு சென்று கொள்ளையடித்துச் சேர்த்த பொருளைக் கொண்டு திருமாலடியார்களை ஆராதிக்கும் தொண்டைச் செய்து வந்தார். எம்பெருமான் இவருக்குத் திருவருள் புரியக் கருதிப் பல அணிகலன்களைப் பூண்டு மணவாளனாக வந்தார். அப்போது நீலனார் அவரை வளைத்து ஆபரணங்களை அபகரிக்கையில் காலில் அணிந்திருந்த மோதிரத்தைக் கழற்ற முடியவில்லை. பற்களால் கடித்து வாங்க முற்படும் போது பெருமானது திருவடித் தொடர்பால் ஞானம் ஏற்பட்டது. பெருமான் அப்போது அஷ்டாட்சரமாகிய எட்டெழுத்து மந்திரத்தை உபதேசித்துக் கருடாரூடராகக் காட்சி கொடுத்தார். நீலனார் தாம் அடைந்த ஞானானுபவத்தால் ஆசு, மதுரம், சித்திரம் விஸ்தாரம் என்னும் நான்கு வகைக் கவிகளிலும் வல்லவராய், நம்மாழ்வார் அருளிய

திருவிருத்தம் முதலிய நான்கு பிரபந்தங்களுக்கும் அங்கங்களாகப் பெரிய திருமொழி, திருக்குறுந் தாண்டகம், திருநெடுந் தாண்டகம், திருவெழுக் கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என்னும் ஆறு பிரபந்தங்களை இயற்றிய காரணமாகத் திருமங்கை ஆழ்வார் எனப்பெயர் பெற்றார். இவருடைய பாடல்களில் சிறுபுலியூர்ப் பாசுரங்கள் 7வது பத்தில் 9வது திருமொழியாக உள்ளன. இவர் திருவரங்கம் பெரிய கோயிலுக்கு வந்து விமானம், கோபுரம், மண்டபங்கள் முதலிய திருப்பணிகளைச் செய்ததாகக் கூறுவர். இவர் பல பதிகளுக்கும் யாத்திரை சென்று வழிபட்டு முடிவில் திருக்குறுங்குடியில் யோக நிஷ்டையிலிருந்து பரமபதஞ் சேர்ந்ததாகக் கூறுவர். இவருக்குப் பரகாலர், ஆலி நாடர், கலியன், கலிகன்றி, நாலுகவிப் பெருமாள் முதலிய பெயர்களும் உண்டு. இவர் காலம் கலி 398 (B. C. 2714) என்றும், 8ம் நூற்றுண்டில் வாழ்ந்த 2ம் நந்திவர்ம பல்லவனையும், பிற அரசர்களையும் தம் பாசுரங்களில் குறிப்பிட்டிருப்பதால் 8ம் நூற்றுண்டு என்றும் சொல்லப்படுகிறது. இவற்றைப் பற்றிய ஓர் கல்வெட்டுச் செய்தி "இத்திருவோலக்கத்தில் **திருநெடுந்தாண்டகம்** விண்ணப்பம் செய்வோர்க்கு ஒரு காசு இடுவதாகவும்" என்பது.

4. ஸ்ரீமணவாள மாமுனிகள்.

"இவர் தென்கலை ஸ்ரீவைஷ்ணவ ஆச்சாரியர். இவர் கலி 4472ல் 14வது நூற்றுண்டில் சாதாரண வருடம் ஐப்பசி மாதம் சுக்கில பட்சம் சதுர்த்தசி வியாழக்கிழமை மூல நட்சத்திரத்தில் பாண்டி நாட்டில், சுக்கில் கிடாரம் என்னும் கிராமத்தில், திருமால் மனத்தண்ணர் என்பவருக்குப் புதல்வராய் அவதரித்தார். இவரும், சிவாக்ர யோகிகளும் ஒரு காலத்தவர். இருவரும் தஞ்சாவூரில் சரபோஜி மகா ராஜாவின் சமூகத்தில் சமய வாதம் செய்த

தாகக் கூறுவர். இவர் தமிழ்ப் புலமையில் மிகச் சிறந்தவர் என்பது இவர் அருளிச்செய்த உபதேச ரத்ன மாலை முதலிய பிரபந்தங்களால் கரதலாமலகமாக (உள்ளங்கை நெல்லிக்கனியாக) விளங்கும்.'' (பேரகராதி)

இவரது பிள்ளைப்பெயர் அழகியமணவாளன் என்றும், பிறந்த இடம் ஆழ்வார் திருநகரி என்றும், தந்தையார் பிரான்தாசரண்ணர் என்றும், திருவாய்மொழிப்பிள்ளை என்ற ஞானச்சாரியரிடம் சமயதத்துவப் பொருள்களைக் கற்றுக் கொண்டார் என்றும் கூறுவர். ஸ்ரீவைணவ ஆச்சாரியார் மூவருள் ஒருவர். இவருக்கு ஸ்ரீ ராமானுஜ ஜீயர் முதலிய எட்டு சீடர்கள் உண்டு. அவர்களில் எறும்பியப்பா என்பவர் சிறந்தவராகப் போற்றப்படுகிறார். ஸ்ரீமணவாளர் திருவரங்கத்தில் திருவாய்மொழிப் பொருள் வியாக்கியானம் செய்தபோது ஸ்ரீரங்கநாதரே ஒரு பிள்ளைபோல் வந்து ஓர் ஸ்லோகத்தைப் பாடிச்சென்று மறைந்தார் என்பது பழைய வரலாறு. இவர் அருளிய நூல்கள் உபதேச ரத்தினமாலை, திருவாய்மொழிநூற்றந்தாதி, ஆர்த்திப் பிரபந்தம், யதிராஜவிம்சதி, தேவராஜமங்களம் முதலியன. இவைகளில் சில பாடல்கள் பின்னே சேர்க்கப் பெற்றுள்ளன.

இவரை ஆதி சேஷனின் அவதாரம் என்று வைணவர்கள் போற்றுகிறார்கள். இவர் ஸ்ரீரெங்கத்தில் வசித்து வந்தபோது தாம் தங்கியிருந்த மடத்தின் கம்பத்தடியில் யோகத்தில் இருந்தார். அப்போது தம்மிடம் வந்த உத்தம நம்பிக்குத் தமது அவதார ரகசியத்தைக் காட்டினார். அவ்விடத்தில் மூலவரும் உற்சவருமாக விளங்குகிறார். ஆண்டு தோறும் நடைபெறும் உற்சவங்களில் இவருடைய உற்சவம், ஐப்பசி மாதம் மக நட்சத்திரத்தில் தொடங்கிப் பத்து நாட்கள் நடைபெறும். அப்போது ஸ்ரீமணவாள மாமுனிகளின் உற்சவர் புறப்பட்டுக் காட்சி கொடுப்பர்.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

13. துதிப்பாடல்கள்

திருமங்கை ஆழ்வார் அருளிய பாடல்கள்:—

கள்ளம் மனம்விள்ளும் வகைகருதிக் கழல்தொழுவீர்
வெள்ளம் முதுபரவைத் திரைவிரியக் கரையெங்கும்
தெள்ளும் மணிதிகழும் சிறுபுலியூர்ச் சலசயனத்
துள்ளும் எனதுள்ளத் துளுமுறைவாரை யுள்ளீரே. 1

தெருவில்திரி சிறுநோன்பியர் செஞ்சோற் றொடுகஞ்சி
மருவிப் பிரிந்தவர் வாய்மொழி மதியாது வந்தடைவீர்
திருவில்பொலி மறையோர் சிறுபுலியூர்ச் சலசயனத்து
உருவக்குற ளடிகள்ளடி யுணர்மின் னுணர் வீரே. 2

பறையும்வினை தொழுதுய்மின் நீர்பணியும் சிறுதொண்டீர்
அறையும்புன லொருபால் வயலொருபால் பொழிலொரு [பால்
சிறைவண் டினமறையும் சிறுபுலியூர்ச் சலசயனத்
துறையும் இறையடியல்ல தொன்றிறையும் அறியேனே. 3

வானார்மதி பொதியும் சடைமழுவாளி யொடொருபால்
தானாகிய தலைவன்னவன் அமரர்க் கதிபதியாம்
தேனார் பொழில்தழுவும் சிறுபுலியூர்ச் சலசயனத்
தானாயனது அடியல்ல தொன்றறியே னடியேனே. 4

நந்தாநெடு நரகத்திடை நணுகாவகை நாளும்
எந்தாயென இமையோர் தொழு தேத்தும் மிடம்எறிநீர்ச்
செந்தாமரை மலரும் சிறுபுலியூர்ச் சலசயனத்து
அந்தாமரை யடியாய் உனதடியேற் கருள் புரியே. 5

முழுநீலமு மலராம்பலும் அரவிந்தமும் விரவிக்
கழுநீரொடு மடவாரவர் கண்வாய் முகமலரும்
செழுநீர் வயல்தழுவும் சிறுபுலியூர்ச் சலசயனம்
தொழுநீர்மைய துடையார் அடிதொழுவார் துயரிலரே. 6

சேயோங்கு தண் திருமாலிருஞ் சோலைமலை யுறையும்
மாயா எனக் குறையாயிது மறைநான் கினுளாயோ
தீயோம்புகை மறையோர் சிறுபுலியூர்ச் சலசயனத்
தாயோ உனதடியார் மனத்தாயோ அறியேனே. 7

மையார் வரிநீலம் மலர்க்கண்ணார் மனம்விட்டிட்டு
உய்வானுன கழலேதொழு தெழுவேன் கிளிமடவார்
செவ்வாய் மொழிபயிலும் சிறுபுலியூர்ச் சலசயனத்து
ஐவாயர வணைமேலுறை யமலா அருளாயே. 8

கருமா முகிலுருவா கனலுருவா புனலுருவா
பெருமால் வரையுருவா பிறவுருவா நினதுருவா
திருமா மகள்மருவும் சிறுபுலியூர்ச் சலசயனத்து
அருமா கடலமுதே உனதடியே சரணமே. 9

சீரார் நெடுமறுகில் சிறுபுலியூர்ச் சலசயனத்து
ஏரார் முகில்வண்ணன் றனை இமையோர் பெருமானை
காரார் வயல்மங்கைக் கிறைகலியன் னொலிமாலை
பாரா ரிவைபரவித் தொழப்பாவம் பயிலாவே. 10

அழகிய மணவாள தாசர் என்னும் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் இயற்றிய **நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி.**

ஆமருவி மேய்த்த அரங்கரெதிர் ஆர்நிற்பார்
தாமருவி வாணனைத்தோள் சாய்த்தநாள்—சேமம்
உறுபுலியூர் வன்றேல் உடையான் உடைந்தான்
சிறுபுலியூர் எந்தைமேற் சென்று.

பொதுப் பாடல்கள்

உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர் அன்னவர்க்கே சரணங்களே. 1

—**கம்பர்**

113986
02:38.21695
N54

கருடன்

கருமுகில் தாமரைக்காடு பூத்துநீடு
இருசுடர் இருபுறத்தேந்தி ஏடவிழ்
திருவொடும் பொலியவோர் செம்பொற்குன்றின்மேல்
வருவபோல் கலுழன்மேல்வந்து தோன்றினான். 2

—கம்பர்

அனுமான்

அஞ்சிலே யொன்று பெற்றான் அஞ்சிலேயொன்றைத்தாவி
அஞ்சிலே யொன்றாறாக ஆரியர்க்காகவேகி
அஞ்சிலே யொன்று பெற்ற அணங்கு கண்டயலாரூரில்
அஞ்சிலே யொன்றை வைத்தான் அவனம்மை
[அளித்துக்காப்பான். 3

—கம்பர்

அனந்தன்

இருளிரியச் சுடர்மணிகளிமைக்கும் நெற்றி
இனத்துத்தியணிபணமா யிரங் களார்ந்த
அரவரசப் பெருஞ்சோதி அனந்தன் என்னும்
அணிவிளங்கு முயர்வெள்ளை அணையைமேவி
திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி
திரைக்கையாலடிவருடப்பள்ளி கொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக்கண்டு கொண்டென்
கண்ணிணைகள் என்றுகொலோ களிக்கும் நாளே. 4

—குலசேகரப் பெருமாள்

பிரகலாதன்

தேம னுரிமை புரியத் திசைமுகத்தோன்
ஓம மியற்ற உடையான் முடிசூட்டக்
கோமன்னவனாகி மூவுலகுங் கைக்கொண்டான்
நாம மறையோதாதோதி நனிஉயர்ந்தான். 5

—கம்பர்

ஆழ்வார்கள்

பொய்கைபூ தன்பேயார் பொன்மழிசைக் கோன்மாறன்
செய்ய மதுரகவி சேரர்பிரான்—வையகமெண்
பட்டர்பிரான் கோதைதொண்டர் பாதப் பொடிபாணன்
கட்டவிழ்தார் வாட்கலியன் காப்பு. 6

—பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்

திருமங்கை ஆழ்வார்

வாழி பரகாலன் வாழி கலிகன்றி
வாழி குறையலூர் வாழ்வேந்தன்—வாழியரோ
மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள் மங்கையர்
[கோன்
தூயோன் சுடர்மான வேல். 7

—தனியன்

ஸ்ரீ ஆண்டாள்

அன்ன வயல்புதுவை ஆண்டாள் அரங்கற்குப்
பன்னு திருப்பாவை பல்பதியம்—இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள்நற் பாமாலை பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு. 8

— தனியன்

ஸ்ரீ மணவாள மாமுனிகள்

“ஸ்ரீ𑌶𑍈𑌲𑍇𑌶 𑌦𑌯𑌾𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌧𑍀𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 𑌗𑍁𑌣𑌾𑌰𑍍𑌣𑌵𑌮𑍍
𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑍍𑌰𑌵𑌣𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌰𑌮𑍍𑌯ஜா𑌮𑌾𑌤𑌰𑌂 𑌮𑍁𑌨𑌿𑌮𑍍”

இதன் பொருள் :— ஸ்ரீ சைலேசருடைய தயைக்குப் பாத்திரரும், ஞானம் பக்தி முதலிய குணங்கட்குக் கடல் போன்றவரும், யதிராசரை வழிபடும் பழக்கமுடையவருமாகிய அழகிய மணவாள மாமுனிகளை வணங்குகிறேன். 9

—தனியன்

திருமால்

குலந்தரும் செல்வந் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும்பு அருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம். 10

—திருமங்கை ஆழ்வார்

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய்க் கமலச்செங்கண்
அச்சுதா அமரர் ஏறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே.

—தொண்டரடிப்பொடி ஆழ்வார்,

வாளா லறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே. 12

—குலசேகரப்பெருமாள்

ஒன்றெனப் பலவென அறிவரும் வடிவினுள் நின்ற
நன்றெழில் நாரணன் நான்முகன் அரனென்னு மிவரை
ஒன்ற நும்மனத்து வைத்துள்ளி நும்மிருபசை யறுத்து
நன்றென நலஞ்செய்வ தவனிடை நம்முடை நாளே 13

—நம்மாழ்வார்.

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா—நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான். 14

—பூதத்தாழ்வார்

வாழ்த்துகவாய் காண்ககண் கேட்க செவி, மகுடம்
தாழ்த்து வணங்குமின்கள் தண்மலரால்—சூழ்த்த
துழாய்மன்னு நீண்முடியென் தொல்லைமால் தன்னை
வழாவண்கை கூப்பி மதித்து. 15

—திருமழிசையாழ்வார்.

இலக்குமி

செங்கமலப் பொலந்தாதின் திகழ்ந்தொளிரும் எழில் [மேனித்
திருவே வேலை
அங்கணுல கிருள்துரக்கும் அலர் கதிராய் வெண்மதி [யாய்
அமரர்க் கூட்டும்
பொங்கழலாய் உலகளிக்கும் பூங்கொடியே நெடுங் [கானில்
பொருப்பில் மண்ணில்
எங்குளைநீ அவணன்றே மல்லல்வளம் சிறந்தோங்கி
இருப்ப தம்மா 16

—தனிப்பாடல்

சரஸ்வதி

மயிலே மடப்பிடியே கொடியே இளமான் பிணையே
குயிலே பசுங்கிளியே அன்னமே மனக்கூரிருட்கோர்
வெயிலே நிலவெழு மேனிமின்னே இனிவேறு தவம்
பயிலேன் மகிழ்ந்து பணிவேன் உனது பொற்பாதங்களே.

—கம்பர்

எந்தை திருவாய் மொழிப்பிள்ளை இன்னருளால்
வந்த உபதேச மார்க்கத்தைச்—சிந்தைசெய்து
பின்னவரும் கற்க உபதேசமாய்ப் பேசுகின்றேன்
மன்னியசீர் வெண்பாவில் வைத்து. 18

பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ்மழிசை
அய்யன் அருள்மாறன் சேரலர்கோன்—துய்யபட்ட
நாதன் அன்பர் தாள்தூளி நற்பாணன் நன்கலியன்
ஈதிவர் தோற்றத்தடைவாம் இங்கு. 19

பேதை நெஞ்சே இன்றைப் பெருமை அறிந்திலையோ
ஏதுபெருமை இன்றைக்கென் றென்னில்—ஓதுகின்றேன்
வாய்த்தபுகழ் மங்கையர்கோன் மாநிலத்தில் வந்துதித்த
கார்த்திகையில் கார்த்திகைநாள் காண். 20

—உபதேசரத்தினமாலை.

பிறவியற்று நீள்விசும்பில் பேரின்ப முய்க்கும்
திறம் அளிக்கும் சீலத் திருமால்—அறவினியன்
பற்றுமவர்க் கென்று பகர்மாறன் பாதமே
உற்றதுணை யென்றுளமே ஒடு. 21

செய்ய பரத்துவமாய்ச் சீரார் வியூகமாய்
துய்ய விபவமாய்த் தோன்றிவற்றுள்—எய்துமவர்க்கு
இந்நிலத்தில் அர்ச்சாவ தாரம் எளிதென்றான்
பன்னு தமிழ்மாறன் பயின்று: 22

—திருவாய்மொழி நூற்றந்தாதி.

வாதனையி லூற்றமோ மாளாத வல்வினையோ
ஏதென் றறியேன் எதிராசா—தீதாகும்
ஐம்புலனி,லாசை அடியேன் மனந்தன்னை
வன்புடனே தானடரும் வந்து. 23

எனைப்போல் பிழைசெய்வார் இவ்வுலகில் உண்டோ
உனைப்போல் பொறுக்கவலார் உண்டோ—அனைத்துலகும்
வாழப் பிறந்த எதிராச மாமுனிவா
ஏழைக் கிரங்காய் இனி. 24

— ஆர்த்திப்பிரபந்தம்.

(18 முதல் 24 வரையிலுள்ள பாடல்கள் ஸ்ரீமணவாளமாமுனிகள் அருளியவை)

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பல்கோடி நூறுயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா உன்
செவ்வடி செவ்விதிருக் காப்பு. 25

—பெரியாழ்வார்

சிறுபுலியூர்ப் பெருமாள் சேவடி போற்றி.

O22:38.21193.2
N54
113986

7B
8-47

7C